தேச பக்தி

DHESA BAKTHI


நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 176 ★ 27.10.2026 ★தமிழ் நாளிதழ் ★செவ்வாய்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:176 ★27.10.2026 ★TamilDaily ★Tuesday ★Page-4 ★Price-₹5/- Chennai



மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் க.விக்னேஷ் , திண்டுக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி, இ.ஆ.ப., தலைமையில், நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் இரா.அய்யனார் முன்னிலையில், கொடைக்கானல் வட்டத்திற்குட்ட அடுக்கம் மலைச்சாலை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு பணிகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எஸ்.சாந்தி , தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) ரமேஷ் , கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) விஜயக்குமார் , கொடைக்கானல் கோட்டாட்சியர்(பொ) பிரபாகரன் , கொடைக்கானல் வட்டாட்சியர் நந்தகோபால் அவர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்..

செம்பரம்பாக்கம் ஏரியை 24 மணி நேரமும் கண்காணிக்க அதிகாரிகளுக்கு தமிழக முதல்வர் விஜய் உத்தரவு

செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம், நீர்வரத்தை 24 மணி நேரமும் கண்காணிக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு முதல்–அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ள நிலையில்,முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் செம்பரம்பாக்கம் ஏரியை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் இன்று (26.10.2026), காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள செம்பரம்பாக்கம் ஏரியின் மதகுநீர்த் திறப்புகள், நீரெடுப்புக் கோபுரம், கரைப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு, ஏரியின் தற்போதைய நீர்மட்டம், நீர்வரத்து, வெளியேற்றம் மற்றும் வெள்ளத் தாங்கு இருப்பு குறித்து நீர்வளத்துறை அலுவலர்களிடம் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இன்று (26.10.2026) காலை 6 மணி நிலவரப்படி, செம்பரம்பாக்கம் ஏரியின் முழு நீர்மட்டமான 24.00 அடியில், தற்போது நீர்மட்டம் 14.76 அடியாகவும், மொத்தக் கொள்ளளவான 3,645 மில்லியன் கன அடியில் தற்போது நீர் இருப்பு 1,488 மில்லியன் கன அடியாகவும் உள்ளது. இது மொத்தக் கொள்ளளவில் சுமார் 41 சதவீதமாகும். நீர்வரத்து வினாடிக்கு 150 கன அடியாகவும், வெளியேற்றம் வினாடிக்கு 208 கன அடியாகவும் உள்ளது.

இந்நிலையில், முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் இன்று செம்பரம்பாக்கம் ஏரியில் ஆய்வு மேற்கொண்டபோது, ஏரியின் பாதுகாப்பு கருதி, நீர்மட்டம், நீர்வரத்து மற்றும் வெளியேற்றம் ஆகியவை 24 மணி நேரமும் இடைவிடாமல் கண்காணிக்கப்பட வேண்டும் என்றும், கட்டுப்பாட்டு அறைகள் முழு



எண்ணிக்கையிலான ஊழியர்களுடன் தொடர்ந்து இயங்க வேண்டும் என்றும் நீர்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், மதகுநீர்த் திறப்புகள், தூக்கும் அமைப்புகள், மின்னாற்றல் மற்றும் மாற்று மின்னாற்றல் வசதிகள், தொலைத்தொடர்பு இணைப்புகள் ஆகியவை முழு செயல்பாட்டுத் தயார்நிலையில் வைக்கப்பட வேண்டும் என்றும், உபரி நீர் திறக்க வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில், அது படிப்படியாகவும், ஒழுங்குபடுத்தப்பட்ட முறையிலும் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அடையாறு ஆற்றின் கீழ்ப்பகுதியில் உள்ள சென்னை மாநகரின் வெள்ள பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் பாதிக்கப்படாத வகையில் நீர் வெளியேற்றம் திட்டமிடப்பட வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நீர் திறப்பதற்கு முன்னதாக, கீழ்ப்பகுதி மக்களுக்கு முன்கூட்டியே உரிய அறிவிப்பு வழங்கப்படவேண்டும்என்றும், வருவாய்த்துறை, காவல்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் குடிநீர் வாரியத்துடன் முழு ஒருங்கிணைப்பு பேணப்பட வேண்டும் என்றும், பருவமழைக்காலம் முழுவதும் தொகுப்பேட்டில் வரையறுக்கப்பட்ட நீர்மட்டங்களுக்கேற்ப அணை இயக்கப்பட்டு, வெள்ளத் தாங்கு இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அதேநேரத்தில் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைக்கான இருப்பும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பத்திரப்பதிவு அலுவலகம் முன்பு

காகிதமில்லா பத்திரப்பதிவு நடைமுறைகளை திரும்பப்பெறக்கோரி பத்திரம் எழுதுவோர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ள காகிதமில்லா பத்திரப்பதிவு மற்றும் நேரில் வருகை தரத் தேவையற்ற பதிவு நடைமுறைகளைத் திரும்பப் பெற வலியுறுத்தி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பத்திரப்பதிவு அலுவலகம் முன்பு தமிழ்நாடு பத்திரம் எழுதுவோர் சங்கம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழக அரசு கொண்டுவந்துள்ள ஸ்டார் இ–டெண்டர் 3.0 மற்றும் எழுத்துப்பிழைகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட நபர்கள் நேரில் ஆஜராகாமல் பதிவு செய்யும் நடைமுறையில், தவறான நபர்கள் ஆதாயம் பெறுவதற்கான வாய்ப்புகள் உருவாகலாம் என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

பத்திரப்பதிவு நடைமுறைகளில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத்




தவிர்க்கவும், ஆவணங்களின் துல்லியத்தையும் பதிவின் நம்பகத்தன்மையும் உறுதிப்படுத்தவும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கத்தினர் வலியுறுத்தினர்.

பத்திரம் எழுதுவோர் மற்றும் பத்திர நகல் எழுதுவோரின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில்,புதியபதிவுநடைமுறைகளை மறுபரிசீலனை செய்து, அவற்றைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஸ்டார் 3.0 திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் புதிய பதிவு நடைமுறைகள், பத்திரம் எழுதுவோர் மற்றும் பத்திர நகல் எழுதுவோரின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என சங்கத்தினர் தெரிவித்தனர். இந்த நடைமுறைகளால் தமிழகத்தில் சுமார் 6 லட்சம் பத்திர நகல் எழுதுவோர் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ள தாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

மேலும், புதிய நடைமுறைகளைச் செயல்படுத்தும்போது பத்திரப்பதிவில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படக்கூடும்என்றும்,ஆவணங்களில்

பழனி கொடைக்கானல் சாலையில் பாறை உருண்டு விழுந்தது; மரமும் சாய்ந்ததால் வாகன ஓட்டிகள் அச்சம்



திண்டுக்கல் மாவட்டம் பழனி கொடைக்கானல் சாலையில் பாறை ஒன்று உருண்டு சாலையில் விழுந்துள்ளது. மேலும், மரம் ஒன்றும் சாய்ந்ததால் அப்பகுதியில் வாகன ஓட்டிகள் எச்சரிக்கையுடன் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அன்பில் மகேசுக்கு 6ம் தேதி வரை நீதிமன்ற காவல் - புழல் சிறையில் அடைப்பு

அன்பில் மகேஷ் பொய்யாமொழியை 6ம் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

கடந்த திமுக ஆட்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சராக இருந்தவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

இதனிடையே, கடந்த திமுக ஆட்சியில் தமிழகத்தில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம், பள்ளிகள் தரம் உயர்த்துதல் மற்றும் இதர அரசு அனுமதிகளைப் பெற்றுத் தருவதாக கூறி ரூ. 100 கோடிக்கும் மேல் முறைகேடாக பணம் வசூலிக்கப்பட்டதாக புகார் எழுந்தது.

இந்த ஊழல் புகார் தொடர்பாக முன்னாள் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு எதிராக சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக கடந்த செப்டம்பர் 16–ந்தேதி அன்பில் மகேசுக்கு சொந்தமான இடங்களில் மத்திய குற்றப்பிரிவு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.

இதனிடையே, ரூ. 100 கோடி ஊழல் வழக்கில் முன்ஜாமீன் கோரி அன்பில் மகேஷ் தாக்கல் செய்த மனுவை சென்னை ஐகோர்ட்டு நேற்று தள்ளுபடி செய்தது. முன்ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேசை சென்னை அமைந்தகரையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வைத்து போலீசார் நேற்று கைது செய்தனர்.

பின்னர், அவர் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டார். அங்கு அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதனை தொடர்ந்து மருத்துவபரிசோதனைக்காக அன்பில் மகேஷ் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கு அவருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.



இதையடுத்து, மருத்துவ பரிசோதனைக்குப்பின் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். சிறப்பு நீதிமன்ற நீதிபதி எல். எஸ். சத்யமூர்த்தி முன் ஆஜர்படுத்தப்பட்ட அன்பில் மகேசை விசாரணைக்கு எடுக்க அனுமதிக்குமாறு போலீசார் தரப்பில் வாதிடப்பட்டது. அதேவேளை, அன்பில் மகேசுக்கு ஜாமீன் வழங்கக்கோரி திமுக வழக்கறிஞர் வில்சன் வாதிட்டார். நள்ளிரவு 12.30 மணிவரை இரு தரப்பும் வாதிட்டனர்.

இந்நிலையில், இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை போலீசார் நீதிமன்ற காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி அளித்தார். அதன்படி, அன்பில் மகேஷ் பொய்யாமொழியை வரும் 6ம் தேதி வரை (10 நாட்கள்) நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை வரும் 6ம் தேதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க கோர்ட்டு உத்தரவிட்டதை தொடர்ந்து அவர் கோர்ட்டில் இருந்து அழைத்து செல்லப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

TNPSC தொகுதி IV தேர்வுக்கு நவம்பர் 2 முதல் இலவசப் பயிற்சி வகுப்புகள் விண்ணப்பதாரர்கள் முன்பதிவு செய்ய ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IV போட்டித் தேர்வுக்குத் தயாராகும் தேர்வர்களுக்காக, திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டம் சார்பில் நவம்பர் 2–ஆம் தேதி முதல் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC), தொகுதி IV பணியிடங்களுக்கான தேர்வு அறிவிப்பை 06.10.2026 அன்று வெளியிட்டுள்ளது. இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 10–ஆம் வகுப்பு தேர்ச்சி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கிராம நிர்வாக அலுவலர் (VAO) பணியிடங்களுக்கு குறைந்தபட்ச வயது 21 ஆகவும், அதிகபட்ச வயது 40 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு குறைந்தபட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது வரம்பு ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் அருந்ததியர் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு 35 வயதாகவும், மிகவும்



பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் முஸ்லிம்களுக்கு 32 வயதாகவும், இதர பிரிவினருக்கு 30 வயதாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு வயது வரம்பில் 10 ஆண்டுகள் வரை சலுகை வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட 10–ஆம் வகுப்புக் கல்வித் தகுதிக்கு மேல் படித்தவர்களுக்கு 60 வயது வரை வயது வரம்பு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வு தொடர்பான கல்வித் தகுதி, வயது வரம்பு, விண்ணப்பிக்கும் முறை உள்ளிட்ட முழுமையான விவரங்களைத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் www.tnpsc.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம். திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்புகள், திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை வார நாட்களில் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும். சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு டிஜிட்டல் பலகை வசதியுடன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இலவசப் பயிற்சியில் பங்கேற்க விரும்பும் தேர்வர்கள், திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரில் தொடர்புகொள்ளலாம். மேலும், 04175–233381 என்ற அலுவலகத் தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு தங்களது பெயரைப் பதிவு செய்து பயிற்சியில் பங்கேற்றுப்பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இராணிப்பேட்டை மாவட்ட காவல்துறை சிறுமி பாலியல் வன்கொடுமை (POCSO) வழக்கில்

குற்றவாளிக்கு 8 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ.11,000/- அபராதம்

இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், கடந்த 25.04.2023 அன்று சிறுமி பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் (POCSO) சம்பந்தப்பட்ட எதிரியான அப்துல் முனாப் (எ) யூனிஸ் (வ/26) என்பவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ்வழக்கு இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் துரிதமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், இன்று (26.10.2026) இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை அமர்வு மாண்புமிகு நீதிபதி அவர்கள், இவ்வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டதன்



அடிப்படையில், குற்றவாளி அப்துல் முனாப் (எ) யூனிஸ் (வ/26) என்பவருக்கு 08 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் ரூ.11,000/– என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இவ்வழக்கில் நீதிமன்றத்தில் சிறப்பாக வழக்கை நடத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்த அரசு வழக்கறிஞர் திரு. V.P.டில்லி, வழக்கின் அப்போதைய புலனாய்வு அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி. ஷாகின், வழக்கின் இப்போதைய புலனாய்வு அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி.லதா மற்றும் நீதிமன்ற காவலர் WPC–790 திருமதி. ஐஸ்வர்யா ஆகியோரை, இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே.சிபின், இ.கா.ப., அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.



வாலாஜாப்பேட்டை காசி விஸ்வநாதர் கோவிலில் ஐப்பசி பௌர்ணமி அன்னாபிஷேகம்

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாப்பேட்டையில் உள்ள விசாலாட்சி அம்பாள் சமேத காசி விஸ்வநாதர் கோவிலில் ஐப்பசி மாத பௌர்ணமியை முன்னிட்டு அன்னாபிஷேகம் நடைபெற்றது.

விசாலாட்சி அம்பாள் சமேத காசி விஸ்வநாதருக்கு அன்னாபிஷேகம், விசாலாட்சி அம்பாளுக்கு காய்கறி மற்றும் பழங்களால் அலங்காரம் செய்து சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர்.ந.ப்ரியா ரவிச்சந்திரன் தலைமையில்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், அலுவலக இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.10.2026) மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டரங்கில் நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு குறைகளை கேட்டறிந்தார்கள்.

மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வருவாய்த்துறை நிலப்பட்டா குறைகள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை வேளாண்மைத் துறை, காவல்துறை. ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித்துறை, கூட்டுறவு, மின்சாரத்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கிராம பொதுப் பிரச்சனைகள், குடிநீர் வசதி, வேலைவாய்ப்பு வேண்டி மனுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் மற்றும் மனுநிராகரிப்பிற்கான காரணங்களையும் மனுதாரர்களுக்கு வழங்கிட வேண்டுமென அலுவலர்களுக்கு



பொதுநலன் குறித்த 432 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து துறை பெற்றுக்கொண்டு உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ந.சரவணன் மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதியதாக அமைக்கப்பட்டு நான்கே ஆண்டுகள் ஆன நிலையில்

19 வயதில் கோப்பையை வென்று ராணிப்பேட்டை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த கிரிக்கெட் வீரர்கள்

பல்வேறு முன்னணி வீரர்கள் பாராட்டு

ராணிப்பேட்டை மாவட்டம் கிரிக்கெட் அசோசியேஷன், ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் இருந்து பிரிந்து நான்கு ஆண்டுகள் ஆன நிலையில் 19 வயதிற்கான ஆண்களுக்கள் கிரிக்கெட் போட்டியில் முயற்சியும் கிரிக்கெட் போட்டியில் வெற்றிக்காக தினமும் உழைத்து இப்பொழுது அந்த மாவட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் முன் உதாரணமாக தனது வெற்றி கோப்பையை வென்றது



கோப்பையை வென்று சாதனை

ராணிப்பேட்டை மாவட்ட கிரிக்கெட் அசோசியேஷன் தலைவர் சந்தோஷ் காந்தி மற்றும் செயலாளர் செல்வகுமார் பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் ஆன நிலையில் இந்த மாவட்டத்தில் 19 வயதிற்கான ஆண்கள் கிரிக்கெட் போட்டியில் தேர்வு செய்து பின்னர் அந்த அணியின் பயிற்சிக்காக தனது முழு குறிப்பிடத்தக்கது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள முன்னணி கிரிக்கெட் வீரர்கள் வெற்றி பெற்ற வீரர்களை பாராட்டும் வகையில் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

வெற்றி பெற்ற வீரர்கள் இது மட்டுமன்றி நாங்கள் ராணிப்பேட்டை மாவட்டத்திற்கு பல்வேறு வகையான வெற்றி மகுடத்தை சூடுவோம் என்று உறுதியளித்தனர்.



விஜயதசமியையொட்டி ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சார்பில், பழனியில் ஊர்வலம் நடைபெற்றது. இதில் மாநில ஒருங்கணைப்பாளர் (சமுதாய நல்லெண்ணக்குழு) கேசவவிநாயகம், மாவட்ட தலைவர் குப்புசாமி, நகர தலைவர் அனந்த சுப்பிரமணியன், விஷ்வ இந்து பரிஷத் தென்மாநில தலைவர் அம்பி ராமகிருஷ்ணன், கண்பத் கிராண்ட் ஓட்டல் ஹரிகரமுத்து, கந்தவிலாஸ் பாஸ்கரன் உள்பட பலர் கலந்துகொண்டனர். ஊர்வலமானது பழனி அடிவாரத்தில் தொடங்கி பஸ்நிலைய ரோடு, பெரியகடைவீதி, ரதவீதிகள் வழியாக தேரடி வரை சென்றது. பின்பு அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில ஒருங்கிணைப்பாளர் கேசவ விநாயகம் பேசினார்



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டரங்கில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் உறுதிமொழி எடுக்கப்பட்டது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ந.சரவணன் மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஐப்பசி பௌர்ணமியை முன்னிட்டு வேப்பூர் வசிஷ்டேஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ வசிஸ்டேஸ்வரருக்கு அன்னாபிஷேக விழா ஸ்ரீ பாலகுஜாம்பிகை அம்மனுக்கு சாகம்பரி அலங்காரத்துடனும் மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது . இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு இறையருளை பெற்றனர்.





திண்டுக்கல் –மதுரை ரோடு, சவேரியார் பாளையம் பகுதியில் உள்ள துறைக்குளத்தில் ஃபாத்திமா வயது –72 தகப்பனார் பெயர் அந்தோணி குரூஸ் என்பவர் தண்ணீரில் இறந்து மிதந்த நிலையில் இருந்தார். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீ தடுப்புக் குழு நிலைய அலுவலர் சக்திவேல் உள்ளிட்ட பணியாளர்கள் சடலத்தை மீட்டனர். பின்னர் திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சக்திவேலிடம் ஒப்படைத்தனர். இறந்தவர் திண்டுக்கல் –சவேரியார் பாளையம் பகுதியை சார்ந்தவர் என்றும், திருமணம் ஆகாதவர் என்றும் தெரியவருகிறது.



தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலுக்கு நாள் தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து வருகை தருகின்றனர் பக்தர்கள் பயன் பெறும் வகையில் திருக்கோவிலின் மூலம் 1) லட்டு 2) அதிரசம் 3) முறுக்கு 4) தேன் திணை மாவு 5) சக்கரை பொங்கல் 6) புளியோதரை ஆகிய ஆறு வகையான பிரசாதங்கள் சுகாதாரமான முறையில் தயார் செய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது

பிரசாதங்கள் தயாரிக்கும் தேவையான மூலப்பொருட்களின் விலைவாசி உயரின் காரணமாகவும் அனைத்து திருக்கோவில்களிலும் நடைமுறைப்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்பட்ட பொதுவான திட்டத்தின் படியும் ஒரே விற்பனை விலையில் தரமான மூலப் பொருட்களை கொண்டு பிரசாதம் தயார் செய்து விற்பனை செய்யும் வகையில் 01.11.2026 ஆம் தேதி முதல் கீழ்காணும் விபரப்படி பிரசாதம் விற்பனை இத்திருக்கோவிலில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

1) லட்டு–(எடை 50 கிராம்) விலை ரூ 20/–
2) அதிரசம்–1(எடை 50 கிராம்) விலை ரூ 20/–
3) முறுக்கு–1(எடை 50 கிராம்) விலை ரூ 25/–
4) தேன் திணை மாவு – எடை 50 கிராம் – விலை ரூ 15/–

சக்கரை பொங்கல் – எடை 150 கிராம்–விலை ரூ 20/–
6)

புளியோதரை–எடை 150 கிராம் ரூ 20/–

திருக்கோவில் நிர்வாகம்

மழையின் காரணமாக கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் இடந்து விழுந்து சேதம்

ராணிப்பேட்டைமாவட்டத்தின் கிழக்கு பகுதியில் சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளது காவேரிப்பாக்கம் பேரூராட்சி. இப்பேரூராட்சியில் சுமார் 20–ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். மேலும் இப்பகுதியில் வேளாண்மை அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், பத்திர பதிவு அலுவலகம், காவல் நிலையம், வருவாய் ஆய்வாளர் அலுவலகம், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் உள்ளிட்ட அலுவலகங்கள் அமைந்துள்ளன. இதன்காரணமாக பஜார் வீதி மற்றும் பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் கூட்டம் பரபரப்பாகவே காணப்படும்.



இந்நிலையில் காவேரிப்பாக்கம் வட்டாரத்தில் கடந்த சில தினங்களாக இரவு மற்றும் பகல் நேரங்களில் அவ்வப்போது மழைபெய்து வருகிறது. இதனால் பஜார் பகுதியில் அமைந்துள்ள கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையின் காரணமாக சுவர் மற்றும் மேல் கூரை ஆகியன இடிந்து விழுந்துள்ளது. இதில் அதிர்ஷ்ட வசமாக உயிர் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை.

மேலும் அலுவலகத்தில் இருந்த கோப்புகள் மழையினால் ஏதும் சேதம் ஏற்படவில்லை. கோப்புகள் அனைத்தையும் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டுள்ளதால், மழையில் இருந்து பாதுகாக்க முடிந்துள்ளன. இருப்பினும் அதிகாரிகள் போதிய இடவசதி இல்லாத காரணத்தால், இடிந்து விழுந்த பழைய கட்டிடத்திலேயே மிகவும் பயந்து பயந்து வேலை செய்து வருகின்றனர். இதேபோல் பொது மக்களும் மிகுந்த அச்சத்துடனே கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று வருகின்றனர்.

எனவே அரசு அதிகாரிகள் விபரிதம் ஏற்படும் முன் பழமைவாய்ந்த இந்த கிராம நிர்வாக அலுவலர் கட்டிடத்தை தகர்த்து, அடிப்படை வசதிகள் கூடிய கிராம நிர்வாக அலுவலர் கட்டிடத்தை கட்டி தரவேண்டும் என்பது இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது.





திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் மேற்கு ஆயக்குடி 16. வது வார்டில் மூன்று நாட்களாக பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட வீடுகளே பழனி சட்டமன்ற உறுப்பினர் ரவி மனோகரன் நேரில் சென்று பார்வையிட்டார் அப்போது வட்டாட்சியர் மங்கள் பாண்டியன் மற்றும் ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருடன் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்

இராணிப்பேட்டை மாவட்டத்தில் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் காயங்களைக் குறைத்து, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், இருசக்கர வாகன ஓட்டுநர்கள் மற்றும் பின்னால் அமர்ந்து பயணிப்பவர்கள் தலைக்கவசம் அணிவதை உறுதி செய்வதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக செயல்படுத்தப்படும்.

இருசக்கர வாகன விபத்துகளின் போது தலைக்கவசம் அணியாததால் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டு உயிரிழப்புகள் நிகழும் அபாயம் அதிகமாக உள்ளது. எனவே, வாகனத்தை ஓட்டுபவரும். பின்னால் அமர்ந்து பயணிப்பவரும் தலைக்கவசம் அணிவது அவசியமாகும். மோட்டார் வாகனச் சட்டம், 1988–ன் பிரிவு 129–ன் படி, இருசக்கர வாகன ஓட்டுநர் மற்றும் பின்னிருக்கையில் பயணிப்பவர் தலைக்கவசம் அணிவது கட்டாயமாகும். தலைக்கவசம் அணியாமல் பயணிப்பவர்களுக்கு பிரிவு 194D–ன்படி ரூ.1,000 அபராதம் விதிக்கப்படுவதுடன், ஓட்டுநர் உரிமத்தை மூன்று மாதங்களுக்கு இடைநீக்கம் செய்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் வாகனத் தணிக்கை மற்றும் ரோந்துப் பணிகளின்போது. இருசக்கர வாகன ஓட்டுநர்கள் மற்றும் பின்னால் அமர்ந்து பயணிப்பவர்கள் தலைக்கவசம் அணிவது தீவிரமாகக் கண்காணிக்கப்படும். விதிமீறல்கள் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், அதிவேகமாக வாகனம் ஓட்டுதல் மற்றும் கைப்பேசியில் பேசிக்கொண்டே வாகனம் ஓட்டுதல் போன்ற போக்குவரத்து விதிமீறல்களைத் தவிர்த்து, சாலை விதிகளை முறையாகப் பின்பற்றுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

எனவே. இராணிப்பேட்டை மாவட்ட பொதுமக்கள் அனைவரும் தலைக்கவசம் அணிவதையும், போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவதையும் அன்றாடப் பழக்கமாகக் கடைப்பிடித்து, சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைக்க மாவட்ட காவல்துறைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தலைக்கவசம் அணிவோம்; உயிரிழப்புகளைத் தடுப்போம்; சாலை விபத்தில்லா இராணிப்பேட்டை மாவட்டத்தை உருவாக்குவோம்.

அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி ரூ.1.32 கோடி மோசடி செய்த குற்றவாளி கைது

மனுதாரர் சென்னை பூந்தமல்லி குமணன்சாவடியைச் சேர்ந்த முகமது இப்ராகிம் (ஆ/வ.40) என்பவர் அளித்த புகாரில், குற்றவாளி தூத்துக்குடி மாவட்டம் அத்திமரப்பட்டியைச் சேர்ந்த சுரேந்தர் (ஆ/வ.31) என்பவர், தான் ஒரு பிரபல மருத்துவர் என்றும், சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புப் பிரிவில் சிறப்பு மருத்துவ ஊட்டச்சத்து நிபுணராகப் பணிபுரிந்து வருவதாகவும் கூறி அறிமுகமாகியுள்ளார்.



சுரேந்தர்

மேலும், பொது சுகாதாரத்துறை இயக்குநர் வாயிலாகப் பலருக்கு அரசு வேலை வாங்கிக் கொடுத்துள்ளதாகக் கூறி, புதுக்கோட்டையில் உள்ள மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் உதவிப் பொறியாளர் பணி வாங்கித் தருவதாகப் பொய்யான வாக்குறுதி அளித்து, மனுதாரரை நம்ப வைத்து, போலியான TNPSC அரசு பணி நியமன ஆணையை வழங்கி ரூ.32,77,400/– பெற்றுக்கொண்டு ஏமாற்றியுள்ளார்.

மேலும், இதேபோன்று மேலும் மூன்று நபர்களுக்கும் அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, போலியான TNPSC பணி நியமன ஆணைகளை வழங்கி, மொத்தமாக மனுதாரர் உட்பட நான்கு நபர்களிடமும் ரூ.1,32,85,900/– பெற்றுக்கொண்டு மோசடி செய்துள்ளார். இதுகுறித்து மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், ஆவடி மத்திய குற்றப்பிரிவு வேலைவாய்ப்பு மோசடி தடுப்புப் பிரிவில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி வழக்கில் தலைமறைவாக இருந்த குற்றவாளியைக் கைது செய்ய, ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவின்படியும், காவல் துணை ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு (பொறுப்பு) டாக்டர் ஜி. வனிதா மற்றும் ஆவடி மத்திய குற்றப்பிரிவு கூடுதல் காவல் துணை ஆணையாளர் பாலமுருகன் மேற்பார்வையிலும் காவல் ஆய்வாளர் மகேஸ்வரி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு தூத்துக்குடியில் தலைமறைவாக இருந்த குற்றவாளி சுரேந்தர் என்பவரைத் தனிப்படையினர் கைது செய்து, பூவிருந்தவல்லி JM–I நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட குற்றவாளியை, நீதிமன்ற உத்தரவின்பேரில் புழல் மத்திய சிறையில் அடைத்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி நேற்று பெய்த கனமழையால் பழனி பழைய தாராபுரம் ரோட்டில் உள்ள சௌராஷ்ட்ரா சமுதாயத்துக்கு பாத்தியப்பட்ட மண்டபம் ஒரு பகுதி திடீரென மலை அதிகமானதால் பழங்காலத்து சுவர் ஒரு பகுதி இடிந்து விழுந்து உள்ளது நல்வாய்ப்பாக யாருக்கும் எந்த சேதம் மற்றும் காயம் இன்றி அனைவரும் உயிர் தப்பினர்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை சோழவரம், வில்லிவாக்கம் வட்டாரம் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா

சோழவரம் வட்டார வில்லிவாக்கம் வட்டார சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை சார்பில் தேசிய ஊட்டச்சத்து மாத விழாவினை முன்னிட்டு மாதவரம் தொகுதி பாடியநல்லூர் அருள்மிகு முனீஸ்வரர் ஸ்ரீ அங்காள ஈஸ்வரி ஆலய மகா மண்டபத்தில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது.

மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய் பிரபு தலைமையில் நடைபெற்ற வளைகாப்பு விழாவில் 220 நிறைமாத கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளையல், மாலை அணிவித்து, சீர்வரிசை பொருட்களை வழங்கி தலைமையுரை ஆற்றினார்.

மாவட்ட திட்ட அலுவலர் ஏ.கலாவதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கர்ப்பிணிப் பெண்களின் உடல்நலன் குறித்து சிறப்புரையாற்றினார்.

முன்னதாக சோழவரம் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் கே.புவனேஸ்வரி அனைவரையும் வரவேற்றார்.

வில்லிவாக்கம் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் காஞ்சனா அனைவருக்கும் நன்றி நவின்றார்.





இந்நிகழ்வில் 220 கர்ப்பிணி தாய்மார்கள் தங்களது குடும்பத்தினர், சோழவரம், வில்லிவாக்கம் வட்டார நிர்வாகிகள், அங்கன்வாடி ஊழியர்கள், தமிழக வெற்றி கழக மாவட்ட, பகுதி, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 220 கர்ப்பிணி பெண்களுக்கு தமிழக வெற்றி கழக மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய் பிரபு ஏழு வகையான உணவினை பரிமாறி, கர்ப்பிணிப் பெண்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.

தேனி மாவட்டம் சின்னமனூர் நகரில்

ஆர்.எஸ்.எஸ் அணிவகுப்பு ஊர்வலம்

தேனி மாவட்டம் சின்னமனூர் நகரில் அக்டோபர் 25 ஆம் தேதியன்று ஆர்.எஸ்.எஸ் அணிவகுப்பு ஊர்வலம் நடுத்தெரு, கண்ணாடிக்கடை முக்கு பகுதியில் தொடங்கி முத்தாலம்மன் கோவில் தெரு, மெயின்ரோடு, வழியாக சென்று மீண்டும் கண்ணாடிக்கடை முக்கில் நிறைவடைந்தது.





ஊர்வலத்தை திரு. AB.திருமூர்த்தி ஆர்.எஸ்.எஸ் மாவட்ட துணைத்தலைவர், P.லோகன்துரை அப்பிபட்டி தமிழ்நாடு எம்மேனவாரு ஒக்கலிகர் மாநில பொறுப்பாளர், திரு. S.ஸ்ரீனிவாசன் ஆன்மீக பேச்சாளர் எரகோட்டைபட்டி கொடியசைத்து துவக்கி வைத்தனர். பொதுக்கூட்டத்திற்கு ஆர்.எஸ்.எஸ் மாநில பொதுக்குழு உறுப்பினர் திரு. க.ஆனந்த கார்த்திக்ராஜ் சிறப்புரையாற்றினர். ஆர்.எஸ்.எஸ் நூற்றாண்டில் செய்த சேவைகள் பற்றியும் இன்றைய காலக்கட்டத்தில் ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு நமது குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படுத்தல், நமது பண்பாடு கலாச்சாரம் பேணிகாத்தல் ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றும் சிறப்புரையாற்றினர். இந்த நிகழ்ச்சியை ஆர்.எஸ்.எஸ் நிர்வாகிகள் S.செந்தில்குமார், C.மணிகண்டன், G.மாரிச்செல்வம் சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி ஒன்றியம் பத்திரப்பதிவு அலுவலகத்தில் லஞ்ச புகார்

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி ஒன்றியத்தில் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பிறப்புச் சான்றிதழ் இறப்புச் சான்றிதழ் பத்திரப்பதிவு செய்ய லஞ்சம் கேட்டு பத்திரப்பதிவு நிறுத்தி வைத்து பணம் கொடுத்தால் பதிவு இல்லைகள் வெளியே போ என்று அநாகரிகமாக பேசும் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பணிபுரியும் மதன்குமார் என்பவரும் சார் பதிவாளர் அவர்கள் மீது லஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கை எடுக்குமா என பொதுமக்களும் சமூக ஆர்வலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர் சாணார்பட்டி ஒன்றியத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது





திண்டுக்கல் மாவட்டம் பழனி பேருந்து நிலையத்தில் கோவை மார்க்கம் செல்லும் வழியில் பயணிகள் நிற்கும் இடத்தில் நடந்து செல்லும் இடத்தில் சாக்கடை அள்ளிப் போட்டுள்ளனர் நடக்க வழி இல்லாமல் மேலும் சாக்கடை நீர் அங்குள்ள டீ கடையை சாக்கடை நீர் சூழ்ந்துள்ளது பழனி வரும் பயணிகள் சுகாதாரத்தை கேள்விக்குறியாக உள்ளது மேலும் இப்பகுதியில் எந்த நகராட்சி விளக்குகள் எரியவில்லை பயன்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாக உள்ளது இதை உடனடியாக நகராட்சி நிர்வாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பழனிக்கு வரும் முருக பக்தர்கள் சார்பாகவும் மற்றும் பயணிகள் சார்பாகவும் கோரிக்கை வைத்துள்ளனர்



திண்டுக்கல் மாவட்டம் பழனி தெற்கு கிரி வீதி பகுதியில் அமைந்துள்ள பழனி வாய்க்கால் கரை உடப்பு ஏற்பட்டு பிளாட் மற்றும் வயல்வெளிக்குள் தண்ணீர் வெகு வேகமாக சென்றது மேலும் அப்பகுதி தரைப்பாலம் மூழ்கியது இதனால் வழியில் தண்ணீர் வெள்ளக்காடு போல் பார்ப்பதற்கு தென்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்பு:

1,200-க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ள சாவடிகளைப் பிரிக்க ஆலோசனை

ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் ஆய்வுக் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளை மறுசீரமைப்பது தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்களுடன் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான வந்தனா கார்க் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திங்கள்கிழமை (அக். 26) நடைபெற்ற இக்கூட்டத்தில், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்படும் வாக்குச்சாவடிகள் மறுசீரமைப்புப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மாவட்டத்தில் 1,200–க்கும் மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட வாக்குச்சாவடிகளைப் பிரித்து, கூடுதல் வாக்குச்சாவடிகளை உருவாக்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. இதுதவிர, வாக்குச்சாவடிகளை இடமாற்றம் செய்வது, அவற்றின் பெயர்களை மாற்றுவது உள்ளிட்ட முன்மொழிவுகள் குறித்தும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்ட முன்மொழிவுகள் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் கிடைத்த பின்னர், இந்த மறுசீரமைப்பு விவரங்கள் வரும் நவம்பர் 12–ஆம் தேதி வெளியிடப்பட உள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.


இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்கள், தேர்தல் அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் அதிக வருமானம் ஈட்டும் முதல் 10 கோயில்களில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் 233.50. கோடி ரூபாயுடன் முதலிடம் பிடித்துள்ளது இதனை இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் திண்டுக்கல் மாவட்டம் பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவில் ஆண்டுக்கு (233.50) கோடி வருவாயுடன் முதலிடம் பிடித்துள்ளது இந்த 10 கோயில்களின் மொத்த ஆண்டு வருமானம் (941.99) கோடி அக்டோபர் 2026. இல் வெளியான பட்டியலின்படி முழு பட்டியல் 10 கோயில்களின் முதல் இடத்தில் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வருவாயில் முதலிடம் பிடித்துள்ளது

இரண்டரை வயது சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை; குற்றவாளி கைது

கடந்த 23.10.2026–ம் தேதி, எண்ணூர் பகுதியைச் சேர்ந்த இரண்டரை வயது சிறுமி உடல்நலக் குறைவு காரணமாக எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்த நிலையில், சிறுமியைப் பரிசோதித்த மருத்துவர், சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகியிருக்கலாம் எனத் தெரிவித்த தகவலின் அடிப்படையில், W–34 எண்ணூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டார். மேலும், சிறுமியின் தாயார் அளித்த புகாரின் பேரில் 23.10.2026–ம் தேதி அன்றே வழக்குப் பதிவு செய்து



விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் அடிப்படையில் அதே பகுதியைச் சேர்ந்த ரஞ்சித்குமார் (வ/32) என்பவரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டதில், கடந்த 15.10.2026 மற்றும் 17.10.2026 ஆகிய தேதிகளில் வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த சிறுமியை குற்றவாளி அவரின் வீட்டிற்குள் அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்தது தெரியவந்தது.

இதனால், சிறுமியின் உடல்நலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டதும் விசாரணையில் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து, குற்றவாளி ரஞ்சித்குமாரை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது, பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று நலமுடன் உள்ளார்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பல்நோக்கு கூட்டரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் 2026 – வெற்றி பெற்ற 24 அரசு அலுவலர்களுக்கு ரூ.54.36 இலட்சம் மதிப்பீட்டில் பரிசுத் தொகை, பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர் அருள்போஸ், மாவட்ட கல்வி அலுவலர் (திருவள்ளூர்) அமுதா மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்யாறு அருகே நெடும்பிறை, அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர் மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளில் சிறப்பிடம் மாநிலப் போட்டிகளுக்கு தேர்வு

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே நெடும்பிறை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர் மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளில் சிறப்பிடம் பெற்று மாநிலப் போட்டிகளுக்கு தேர்வாகி உள்ளனர். தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை 2026–2027ஆம் கல்வி ஆண்டுக்கான திருவண்ணாமலை மாவட்ட அளவில் 22–10–2026ல் போளூர் அரசு மகளிர் மேனிலைப் பள்ளியில் நடைபெற்ற மேசைப் பந்து போட்டியில் ஆண்கள் இரட்டையர் 19 வயதுக்குட்பட்ட பிரிவில் முதலிடம் பிடித்து மாநில அளவிலான போட்டிக்குத் தகுதிபெற்ற என்.யோகேஷ், மற்றும் கே.சுரேஷ்வரன் ஆகிய இரு மாணவர்களுக்கும், பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர்களான பா. யுவராஜன்



மற்றும் கோ.சந்திரகலா ஆகியோருக்கள பள்ளித் தலைமை ஆசிரியர் வே. குமார், உதவித் தலைமையாசிரியர் த.அருளானந்தன், பெற்றோர்ஆசிரியர் கழகத் தலைவர் மாணிக்கம், பள்ளி மேலாண்மைக்குழுத் தலைவர் ஆர். எழிலரசி ஆகியோர் வாழ்த்துக்களைத் தெரிவித்து பாராட்டினர்.

இந்திய குடியரசு துணைத்தலைவர் அவர்கள், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், காந்தி கிராம பல்கலைக் கழகத்தில் வருகின்ற 30.10.2026 அன்று பட்டமளிப்பு விழாவில் கலந்து வருகை தருவதை முன்னிட்டு 30.10.2026 அன்று திண்டுக்கல் மாவட்டத்தில் ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்க விடும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சி தலைவர் துர்காமூர்த்தி தெரிவித்துள்ளார்



திருவண்ணாமலை மாவட்டத்தில் 1.54 லட்சம் குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ திரவம் வழங்கும் முகாம்: ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் 6 மாதம் முதல் 5 வயது வரையிலான குழந்தைகளின் கண் பார்வையைப் பாதுகாக்கவும், வைட்டமின் ஏ குறைபாட்டால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கவும் வைட்டமின் ஏ திரவம் வழங்கும் சிறப்பு முகாம் அக்டோபர் 26 முதல் 30–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. அக்டோபர் 28–ஆம் தேதி புதன்கிழமை மட்டும் முகாம் நடைபெறாது. மாவட்டத்தில் மொத்தம் 1,54,798 குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ திரவம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.



வைட்டமின் ஏ என்பது கண் பார்வைக்கு மிகவும் அவசியமான ஊட்டச்சத்தாகும். இது நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்துவதுடன், உடல் வளர்ச்சி மற்றும் இதயம், நுரையீரல், சிறுநீரகம் உள்ளிட்ட உறுப்புகளின் இயல்பான செயல்பாட்டுக்கும் உதவுகிறது. சரும ஆரோக்கியத்தையும் பராமரிக்கிறது. எனவே, குழந்தைகளின் அன்றாட உணவில் வைட்டமின் ஏ நிறைந்த உணவுகளைச் சேர்ப்பது அவசியமாகும்.

மீன் எண்ணெய், கல்லீரல், முட்டை உள்ளிட்ட உணவுகளிலும், மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிறக் காய்கறிகள், பழங்கள், அடர் பச்சை நிறக் கீரைகள், குடைமிளகாய், ப்ரோக்கோலி போன்றவற்றிலும் வைட்டமின் ஏ சத்து நிறைந்துள்ளது.

குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ குறைபாடு ஏற்படும்போது மாலைக்கண் நோய், கண்கள் வறட்சி அடைதல், கண்களின் வெண்படலத்தில் பாதிப்பு, பார்வை இழப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். மேலும், நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து பல்வேறு நோய்த்தொற்றுகள் ஏற்படும் அபாயமும் அதிகரிக்கலாம். குறிப்பாக, வைட்டமின் ஏ குறைபாட்டால் குழந்தைகளுக்கு ஏற்படும் பார்வை இழப்பைத் தடுக்கும் நோக்கில், ஆண்டுக்கு இருமுறை, ஆறு மாத இடைவெளியில் இந்த முகாம் நடத்தப்படுகிறது.

இந்த முகாமில் 6 மாதம் முதல் 11 மாதம் வரையிலான குழந்தைகளுக்கு 1 மில்லி லிட்டர் (1,00,000 சர்வதேச அலகுகள்), 12 மாதம் முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு 2 மில்லி லிட்டர் (2,00,000 சர்வதேச அலகுகள்) வைட்டமின் ஏ திரவம் வழங்கப்படும்.

கிராமப்புற மற்றும் நகர்ப்புற சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆஷா பணியாளர்கள் ஆகியோர் மூலம் அங்கன்வாடி மையங்களில் இந்தத் திரவம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியில் பொது சுகாதாரத் துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், பள்ளிக் கல்வித் துறை மற்றும் சமூக நலத் துறை பணியாளர்கள் இணைந்து செயல்பட உள்ளனர்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த பெற்றோர் தங்களது வீடுகளில் உள்ள 6 மாதம் முதல் 5 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் குறிப்பிட்ட நாட்களில் அருகிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சென்று வைட்டமின் ஏ திரவம் வழங்கி, குழந்தைகளின் கண் பார்வையையும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பெருமாள் மலைப்பகுதியில் மழையினால் சேதமடைந்த பகுதிகளையும், போக்குவரத்து பாதிப்புகளையும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.ஜெயக்குமார், இ.கா.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

ஆற்காடு மகாலட்சுமி நர்சிங் கல்லூரியில் முப்பெரும் விழா

ஆற்காடு மகாலட்சுமி நர்சிங் கல்லூரியில் இன்று வால்மீகி ஜெயந்தி, ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் மற்றும் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை தடுப்பு சட்டம் அமலுக்கு வந்த விழிப்புணர்வு நாள் என முப்பெரும் நிகழ்ச்சி நர்சிங் கல்லூரி வளாகத்தில் 26.10.2026 திங்கள்கிழமை காலை 10.00 மணி அளவில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஸ்ரீ லட்சுமி அம்மாள் கல்வி அறக்கட்டளை தலைவர் Rtn. PHF ஸ்ரீ பாலாஜி லோகநாதன் அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களுக்கு மரகன்று மற்றும் இராமாயணம் புத்தகங்களை வழங்கி கௌரவித்தார். லும்னோ



இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக தேனி, போடிநாயக்கனூர் குரூப்ஸ் ஆப் ஒட்டல் பங்குதாரர் திருமதி செல்வராணி பாண்டியன் மற்றும் வேளான் துறையில் ஒய்வு பெற்ற திருமதி C. நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் பாதுகாப்பு குறித்து பேசினர் பெண்களுக்கு அவசர உதவி எண் 181, 1091 என தெரிவித்தனர்.

இதை தொடர்ந்து நர்சிங் கல்லூரி மாணவிகள் அறியாமை எனும் இருளை அகற்றி அறம் என்னும் ஒளியை உலகிற்கு தந்த ஆதிகவி வால்மீகி அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் குறித்தும் தங்களது கருத்துகளை பேசினர்.

இந்நிகழ்ச்சில் ஆற்காடு மகாலட்சுமி நர்சிங் கல்லூரி முதல்வர் திருமதி C.S.சிவசக்தி, துணை முதல்வர் திருமதி ஞானதீபா, பள்ளி துணை முதல்வர் திருமதி கோமதி, நர்சிங் கல்லூரி ஆசிரியர்கள், மாணவியர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஸ்ரீ லட்சுமி அம்மாள் கல்வி அறக்கட்டளை செயலாளர் திருமதி சாந்தி பாலாஜி, தாளாளர் திருமதி கோமதி பாலாஜி, இணைச்செயலாளர் செல்வி வைஷ்ணவி ஆகியோர் செய்திருந்தனர்.

திருக்கார்த்திகை தீபத்திருவிழாவுக்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள்:

50 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகையை முன்னிட்டு அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தல்

திருவண்ணாமலையில் நடைபெறவுள்ள திருக்கார்த்திகை தீபத்திருவிழாவைக் காண இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படும் நிலையில், பாதுகாப்பு, போக்குவரத்து, வாகன நிறுத்துமிடங்கள், குடிநீர், மருத்துவம், தூய்மை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை முழுமையாக ஏற்படுத்த வேண்டும் என அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், 2026–ஆம் ஆண்டு அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திருவிழா முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் திங்கள்கிழமை (அக். 26) நடைபெற்றது.

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயிலில் நவம்பர் 12–ஆம் தேதி முதல் 28–ஆம் தேதி வரை திருக்கார்த்திகை தீபத்திருவிழா நடைபெறவுள்ளது. விழாவின் முக்கிய நிகழ்வான மகா தீபம் நவம்பர் 24–ஆம் தேதி ஏற்றப்படவுள்ளது. இதைக் காண தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தருவார்கள் என்பதால், அவர்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை உறுதி செய்வது குறித்து கூட்டத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

திருக்கோயில் வளாகம், மாடவீதிகள், கிரிவலப் பாதை மற்றும் பக்தர்கள் அதிகம் கூடும் பகுதிகளில் போதிய காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். கூட்ட நெரிசலைத் தவிர்க்கத் தேவையான தடுப்புகள் அமைப்பதுடன், கண்காணிப்புக் கேமராக்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அவசரகால சூழ்நிலைகளை எதிர்கொள்ள காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மருத்துவத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

பக்தர்களின் வருகைக்கு ஏற்ப தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து சிறப்புப் பேருந்துகளை இயக்கவும், தற்காலிகப் பேருந்து நிலையங்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பேருந்து வழித்தடங்கள், பயணிகள் ஏறும் மற்றும் இறங்கும் இடங்கள் குறித்த விவரங்களைப் பொதுமக்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் அறிவிப்புப் பலகைகள் மற்றும் வழிகாட்டிப் பலகைகளை அமைக்க வேண்டும். நகரின் முக்கிய நுழைவுப் பகுதிகளில் கார்கள், வேன்கள், பேருந்துகள் மற்றும் இருசக்கர வாகனங்களை நிறுத்துவதற்குத் தற்காலிக வாகன நிறுத்துமிடங்களை ஏற்படுத்த வேண்டும். அங்கு குடிநீர், கழிப்பறை, மின்விளக்கு மற்றும் பாதுகாப்பு வசதிகளை உறுதி செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

திருவண்ணாமலை நகருக்குள் வரும் முக்கிய நெடுஞ்சாலைகள், இணைப்புச் சாலைகள் மற்றும் கிரிவலப் பாதைகளில் சாலைப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். சாலைகளில் உள்ள பள்ளங்கள் மற்றும் சேதங்களைச் சீரமைக்கவும், போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள தடைகளை அகற்றவும், விபத்துகள் ஏற்படக்கூடிய இடங்களில் எச்சரிக்கைப் பலகைகள், தடுப்புகள் மற்றும் மின்விளக்குகளை அமைக்கவும் சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது. அவசர ஊர்திகள் உள்ளிட்ட அவசரகால வாகனங்கள் தடையின்றிச் செல்லத் தேவையான வழித்தடங்களையும் உறுதி செய்ய வேண்டும் என ஆட்சியர் வலியுறுத்தினார்.

திருவிழாவின்போது பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் தனிநபர்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உரிய அனுமதி பெற்று, ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே உணவு வழங்க வேண்டும். உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி, சுகாதாரமான உணவுகளை வழங்குவதுடன், உணவுக் கழிவுகளை முறையாக அகற்ற வேண்டும். போக்குவரத்துக்கும் பக்தர்களின் நடமாட்டத்துக்கும் இடையூறு ஏற்படாத வகையில் அன்னதானம் வழங்கப்படுவதை அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.



மேலும், கிரிவலப் பாதை, திருக்கோயில் சுற்றுப்புறங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் வாகன நிறுத்துமிடங்களில் போதிய குடிநீர் வசதி, தற்காலிகக் கழிப்பறைகள் மற்றும் மின்விளக்குகளை அமைக்க வேண்டும். கூடுதல் தூய்மைப் பணியாளர்களை நியமித்து, குப்பைகள் தேங்காத வகையில் தொடர்ந்து தூய்மைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். பக்தர்களுக்கு உடனடி மருத்துவ உதவி வழங்கும் வகையில் முக்கிய இடங்களில் தற்காலிக மருத்துவ முகாம்கள் அமைத்து, மருத்துவக் குழுக்கள் மற்றும் அவசர ஊர்திகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரும் தேவையான உபகரணங்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும் என ஆட்சியர் அறிவுறுத்தினார்.

திருக்கார்த்திகை தீபத்திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்கள் பாதுகாப்பாகவும் சிரமமின்றியும் விழாவில் பங்கேற்கும் வகையில், அனைத்துத் துறை அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைத் திட்டமிட்டு விரைந்து முடிக்க வேண்டும். துறைகளுக்கிடையே முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, விழா சிறப்பாக நடைபெறத் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா. உதயகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநரும் திட்ட இயக்குநருமான பூ. காஞ்சனா, திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் சிவா மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரே நாளில் 943 மக்கள் குறைதீர்வு மனுக்கள் பெறப்பட்டன

மாற்றுத்திறனாளிக்கு சக்கர நாற்காலி வழங்கிய ஆட்சியர் வந்தனா கார்க்

திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டங்களில் பொதுமக்களிடமிருந்து மொத்தம் 943 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து உரிய தீர்வு காண வேண்டும் என அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை (26.10.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

கல்வி உதவித்தொகை, வங்கிக் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா, சாதிச் சான்றிதழ், வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உதவி உபகரணங்கள், சாலை வசதிகள், பிரதமரின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், வேளாண்மைத் துறை சார்ந்த பயிர்க்கடன், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், தாட்கோ மூலம் கடனுதவி, கூட்டுறவுச் சங்கங்களில் பயிர்க்கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 786 மனுக்கள் பெறப்பட்டன.

இதேபோல், செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 92 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 65 மனுக்களும் பெறப்பட்டன. மாவட்டம் முழுவதும் இந்த மூன்று இடங்களிலும் பெறப்பட்ட 943 மனுக்களும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கப்பட்டன.

இதையடுத்து, மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு ரூ.15,750 மதிப்பிலான சக்கர நாற்காலியை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

முன்னதாக, ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அரசு அலுவலர்கள் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்துக்கு ஊழல் தடையாக இருப்பதை உணர்ந்து, அரசு, பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து ஊழலை ஒழிக்கச்



செயல்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு குடிமகனும் விழிப்புணர்வு, நேர்மை, கண்ணியம் ஆகியவற்றுடன் ஊழல் ஒழிப்புக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் உறுதிமொழியில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், அனைத்து செயல்களிலும் நேர்மையையும் சட்ட விதிகளையும் பின்பற்றுவது, இலஞ்சம் வாங்கவோ கொடுக்கவோ கூடாது, பணிகளில் வெளிப்படைத்தன்மையைக் கடைப்பிடிப்பது, பொதுமக்களின் நலனுக்காகப் பணியாற்றுவது, தனிப்பட்ட நடத்தையில் நேர்மைக்கு முன்மாதிரியாகத் திகழ்வது, ஊழல் தொடர்பான நிகழ்வுகளை உரிய அதிகார அமைப்புகளுக்குத் தெரியப்படுத்துவது ஆகியவற்றை அரசு அலுவலர்கள் உறுதிமொழியாக ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், தனித்துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்பு) இளவரசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) இராமகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சுஜாதா, பழங்குடியினர் நலத் திட்ட அலுவலர் செல்வகுமார், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செந்தில்குமரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன், உதவி ஆணையர் (கலால்) வளர்மதி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முகுந்தன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சாரதா உள்ளிட்ட பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

பழனி அருகே தடுப்பணைக்குச் செல்லும் கால்வாய் தண்ணீரைத் திருட முயற்சி; தடுத்து நிறுத்திய அதிகாரிகள்

பழனி அருகே உள்ள அமரபூண்டியில் குளத்திலிருந்து நல்லதங்காள் அணைக்குச் செல்லும் தண்ணீரை தனிநபர் தடுத்து கிணற்றுக்கு கொண்டு செல்ல மேற்கொண்ட முயற்சியை வட்டார வளர்ச்சி அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்.

பழனி, அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தற்போது பெய்துவரும் பருவமழை காரணமாக வறண்டு கிடந்த குளங்கள், ஆறுகள் அனைத்துக்கும் நீர்வரத்து தொடங்கியது. இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். இந்த நிலையில் பழனியை அடுத்த அமரபூண்டியில் உள்ள மயிலி குளத்தில் நீர் நிரம்பி பிறகு கால்வாய் மூலம் நல்லதங்காள் அணைக்கு செல்கிறது. இந்த கால்வாயில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆங்காங்கே சிறிய தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனிடையே ஞாயிற்றுக்கிழமை அமரபூண்டியைச் சேர்ந்த கோழிப்பண்ணை உரிமையாளர் ஒருவர் இந்த தடுப்பணை கரையை உடைத்து அவரது தோட்டக் கிணற்றுக்கு கால்வாய் தண்ணீரை குழாய்கள் அமைத்து திருடிச் செல்ல பொக்லைன் இயந்திரம் மூலம் பள்ளம் தோண்டும் பணிகளை மேற்கொண்டார். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதி விவசாயிகள், வருவாய் நிர்வாகிகள் அங்கு சென்று பணிகளைத் தடுத்து நிறுத்தினர். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபபாண்டியன் உள்ளிட்ட அலுவலர்கள் அந்தப் பணியைத் தடுத்து நிறுத்தினர். கிணற்றுக்கு குழாய் மூலம் தண்ணீர் திருடப்பட்டால் இந்த வாய்க்காலுக்கு கீழே உள்ள விவசாய நிலங்களுக்கு தண்ணீர் செல்லாது என்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து விவசாயிகள் முதல்வரின் தனிப்பிரிவு, மாவட்ட ஆட்சியர், காவல்துறையினரிடம் புகார் செய்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி வருதமா நதி அணை 66.47. அடியை வெட்டி முழுமையாக நிரம்பியது 572 கன அடி உபரி நீர் ஆற்றில் வெளியேற்றம் திண்டுக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து விடிய விடிய கனமழை வெளுத்து வாங்கியது



திண்டுக்கல் மாவட்டம் பழனி ஆரப் ரோட்டில் பாதாளை சாக்கடை திட்டத்திற்கு தோண்டப்பட்ட குளியே சரிவர காங்கிரீட் கலவைகள் போடாமல் இருந்ததால் இதனால் வழியாக வரும் வாகனங்கள் அந்த பாதாள சாக்கடை குழியில் விழும் அபாயம் இருந்தது இந்த செய்தியை எங்கள் தேசபக்தி தினசரி நாளிதழின் ஏற்கனவே (21.10.2026) அன்று செய்தி வெளியிட்டோம் அச்செய்தியை நகராட்சி அலுவலர்கள் செய்தியை கண்டு உடனடியாக அந்தப் பாதாள சாக்கடை திட்டத்தில் போடப்பட்ட ரோட்டை உடனடியாக அதிகாரிகள் சென்று பார்வையிட்டு துரித நடவடிக்கை எடுத்து சரி செய்யப்பட்டது இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மகிழ்ச்சி அடைந்தனர்

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: G.RAJA